

திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கருத்துகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், புலிவலம் ஊராட்சியில், லேனாவிளக்கு முதல் சொக்கநாதபட்டி வரை ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தார்ச் சாலைப் பணியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 09.08.2024 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

# புதுச்சேரி மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம் மூடுவிழாவை நோக்கி செல்கிறது!

## புதுச்சேரி பேரவையில் இரா.சிவா பேச்சு!



புதுச்சேரி, ஆக. 14-

புதுச்சேரி மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம் மூடு விழா நோக்கி சென்று கொண்டிருப்பதை இப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வருவது சம்பந்தமாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது: -

புதுச்சரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் 1986-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. கலை, பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் இந்நிறுவனம், மாநிலத்தில் உள்ள கவிஞர்கள், மானிடவியல், இலக்கியம், பண்பாட்டு தளங்களை ஆய்வு செய்து, ஆவணப்படுத்துவதை முக்கிய இலக்காக கொண்டு செயலாற்றி வருகிறது. அத்துடன் எம்.பில்., பி.எச்.டி., படிப்புகளையும் நடத்தி, ஆய்வாளர்களுக்கு பட்டங்களை வழங்கி வருவதோடு, பிற மாநிலத்திலும் மற்றும் நாட்டினருக்கு தமிழ் கற்பிக்கப்படுகிறது.

இலக்கியம், மொழியியல், பண்பாட்டு இயல் என மூன்று துறைகளை கொண்டுள்ள இந்நிறுவனத்தில் 12 பேராசிரியர்கள் பணியாற்றி வந்தவர். ஆனால் இன்றைக்கு நிறுவனத்தில் ஒரு பேராசிரியர் கூட பணியில் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக மொழியியல் பண்பாட்டு நிறுவனத்திற்கு பி.எச்.டி., படிப்பில் ஒரு மாணவர் கூட சேர்க்கப்படவில்லை.

கலை, பண்பாட்டுத் துறை இயக்குநர் பொறுப்பு அடிப்படையில் இந்நிறுவனத்தை கவனித்து வருகிறார். பத்து பேர் இருக்க வேண்டிய அலுவலகத்தில் ஒரு யுடிசி, ஒரு உதவியாளர், ஒரு டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், ஒரு நூலகர் என நான்கு பேர் மட்டும் பணியாற்றி வருகிறார்கள். மற்றவர்கள் வேறு துறைகளுக்கு மாறிவிட்டனர்.

மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் சொசைட்டியாகத் தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய தேர்வாணையம் வரை கோப்பு அனுப்பி காலியிடங்களை நிரப்ப தேவையில்லை. மாநில அரசே முடிவு செய்து, பேராசிரியர் பணியிடங்களை நிரப்பலாம். கடந்த ஆண்டு 9 பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என் இப்பேரவையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் நிரப்பப்படவில்லை.

ஆகவே, புதுச்சேரி அரசு மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள காலிப்பணியிடங்களை புதுச்சேரியில் தமிழில் எம்.பில்., பி.எச்.டி., முடித்த பட்டதாரிகளை கொண்டு நிரப்பி மீண்டும் அந்நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என அவர் பேசினார்.



கும்பகோணம் தொகுதி அண்ணலக்ரஹாரம் ஊராட்சி, காளிமுத்து நகரில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 4.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பயணிகள் நிழற்குடையை நமது கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அருகில் மத்திய ஒன்றிய செயலாளரும் ஒன்றிய துணை பெருந்தலைவருமான டி.கணேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், ஒன்றிய குழு உறுப்பினர்கள் நளினி பத்மநாபன், சுதா சிவகுமார், ஊராட்சி மன்றத் தலைவர், துணை தலைவர் சங்கர், பகுதி செயலாளர் கேசவன், காங்கிரஸ் நிர்வாகி சிவாஜி சேகர் மற்றும் கழக நிர்வாகிகள், தெரு வாசிகள், நகர் வாசிகள், ஓய்வு பெற்ற அதிகாரிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## உத்திரமேரூரில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கல்!

காஞ்சிபுரம், ஆக. 14 -

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் பல்வேறு பள்ளிகளில் பயிலும் 903 பள்ளி மாணவர்கள் அரசின் விலையில்லா மிதிவண்டிகளை நேற்று மாவட்டச் செயலாளரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் வழங்கினார். இதில் ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய கழக செயலாளர் கெ. ஞானசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் விழா காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளிகளில் நேற்று (12.8.2024) காலை திங்கள்கிழமை 12.08.24 11.00 மணி முதல் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்து கொண்டு பள்ளி 903 பள்ளி மாணவர்கள் - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி, அரசின் திட்டங்களை எடுத்துரைத்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் உத்திரமேரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. ஹேமலதா ஞானசேகரன் முன்னிலை வகித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## மொக்தியார் அலிமஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, ஆக 14 -

அரசியல் மற்றும் பொது வாழ்வில் பொறுமையையும் வேகத்தையும், தன்னுடைய வாழ்க்கை நெறி முறைகளையும் பாடமாக கற்றுக்கொடுத்த தமிழினத் தலைவரின் 6வது ஆண்டு நினைவு நாள்

இந்த நினைவு நாளை தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாஉள்ளிட்ட உலக நாடுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது

செஞ்சி ஒன்றிய தி.மு.க. சார்பில்முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 6வது ஆண்டு நினைவு தினம் செஞ்சி ஒன்றியம் அப்பம்பட்டில் அனுசரிக்கப்பட்டது.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களின் வழிகாட்டுதலின்படி செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற அமைதி ஊர் வலத்தில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,துணை சேர்மன் ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஊர்வலமாக சென்று அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதில் செஞ்சி நகர செயலாளர் கார்த்திக், ஒன்றிய அவைத் தலைவர்கள் ஆறுமுகம், வாசு, ஒன்றிய பொருளாளர் இக்பால், ஒன்றிய துணை செயலாளர்கள் அனுசுயா, குமார், மதியழகன், செல்வமணி, தாட்சாயணி, மாவட்டப் பிரதிநிதிகள் அய்யாதுரை, கோடீஸ்வரன், ஒன்றிய கவுன்சிலர் மணி. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பழனி, பாலகிருஷ்ணன், குப்பன், லியாகத் அலி, முன்னாள் கவுன்சிலர்கள் ரேவதி கணேசன், பரசிவம், ஆவின் இயக்குனர் மாத்தூர் தாஸ்,.. ஒன்றிய இளைஞர் அணிஅமைப்பாளர் பழனி, துணை அமைப்பாளர் செஞ்சி பழனி, ஊராட்சி நிர்வாகிகள் காந்தி, தாஜுதின், வீரப்பன், குப்பன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



ராஜஸ்தான் மாநிலம் நோகார் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான வாலி பால் போட்டியில் வெற்றிபெற்று. இந்திய அளவில் முதல் இடம்பிடித்த மாணவ, மாணவிகள் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடம் வாழ்த்துப் பெற்றனர். உடன் மேயர். ஆ.ராமச்சந்திரன், வாலி பால் சங்கத்தின், மாநில செயலாளர் வஸ்தாத், இரா.கிருஷ்ணன், துணைச்செயலாளர் ஆசிப் முகமது, பயிற்சியாளர் ஹேமலதா, மேலாளர் சிராஜுதின் ஆகியோர் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னகேசவன்
### ஆகஸ்ட் 14 (1984)



தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.

“தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## ஏ.கே.ஜெகதீசன் Ex.MC

தலைமைச் செயற்குழு உறுப்பினர், பகுதிக் கழகச் செயலாளர்
சேப்பாக்கம் பகுதி (1977 – 2000), கலைஞர் விருது – 2019

### 4ஆம் ஆண்டு புகழ் வணக்கம்

11.3.1930 – 14.8.2020



ARASU ARTS

“ஜெகதீசன் நெருப்புக் குண்டத்தையும் உருவாக்குவார்
நெருப்புக் குண்டத்திலும் குதிப்பார்”
“நெருக்கடி நிலை காலத்தில் என்னைப் பாதுகாத்த ஜெகதீசனை
என் உயிர் உள்ள வரை மறக்கமாட்டேன்” – தலைவர் கலைஞர்

மண்வாழும் நாள்வரையும் வாழ்ந்திருப்பார்–எங்கள்
மனங்களில் மணம்வீசிப் பூத்திருப்பார்
கண்காணா நிலையென்று யார்உரைத்தார்–என்றும்
கருத்தாகி காலத்தால் நிறைந்திருப்பார்

நினைவுகளுடன்

**A.K.J.இளஞ்செழியன்** M.A., M.Phil., B.L.,
கூடுதல் இயக்குநர், பொருளியல் – புள்ளியியல் துறை

**குடும்பத்தினர் – கழகத்தினர்**